**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 12 (2021) | ஐரோப்பிய வரலாறு | நேரம் :- 1 மணித்தியாலம் 35 நிமிடம் |
|---|---|---|

**கவனிக்க.**

- ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
- ***01 – 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.***

1) 1. பினிசியா 2. பாபிலோனியா 3. எதென்ஸ்
4. ஸ்பாட்டா 5. மினர்வன் ( )

2) 1. குடிமக்கள் 2. பெண்கள் 3. அடிமைகள்
4. வெளிநாட்டவர் 5. அரசர்கள் ( )

3) 1. தியூசீடிசிஸ் 2. வர்ஜில் 3. ஹொரேஸ்
4. லிவீ 5. ஒவிட் ( )

4) 1. பிலிப்ஒகஸ்டஸ் 2. 4ம் பிலிப் 3. 4ம் ஹென்றி
4. 8ம் ஹென்றி 5. 11ம் லூயி ( )

5) 1. கஸ்ரீல் 2. அரகன் 3. நேப்பிள்ஸ்
4. நவார் 5. கிரனடா ( )

- ***06 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் இடுக.***

6) 1. செயஸ் - ஜூப்பிற்றர்
2. அதீனா - மினேர்வா
3. அப்போலோ - சாத்தான்
4. அபறொடைற் - வீனஸ்
5. பொஸைடென் - நெப்ற்ரியூன்
( )

7) 1. தேம்ஸ் - லண்டன்
2. டனியூப் - வியென்னா
3. எல்ப் - சரஜிவோ
4. ரைபர் - உரோமாபுரி
5. விஸ்ருலா - டன்ஸிக் ( )

8) 1. பிளேட்டோ - அக்கடமி
2. அரிஸ்ரோட்டில் - லைசியம்
3. தோமஸ் அக்குயினாஸ் - சுமாதியோலோஜியா
4. இராஸ்மஸ் - மடைமையின் புகழ்ச்சி
5. மார்டின் லூதர் - கடவுளின் நகரம் ( )

9) 1. போர்த்துக்கல் - பிறேசிஸ்
2. ஸ்பானியா - மெக்சிக்கோ
3. நெதர்லாந்து - பிலிப்பீன்ஸ்
4. இங்கிலாந்து - இந்தியா
5. பிரான்ஸ் - இந்தோ - சைனா ( )

10) 1. மத்தியதரைக்கடலும் செங்கடலும் - சுயெஸ்கால்வாய்
2. ஸ்பானியாவும் மொராக்கோவும் - ஜிப்ரோல்டர் நீரிணை
3. அத்திலாந்திக் சமுத்திரமும் பசுபிக் சமுத்திரமும் - பனைமாக் கால்வாய்
4. வடகடலும் பால்டிக் கடலும் - கீல் கால்வாய்
5. கருங்கடலும் கஸ்பியன் கடலும் - பொஸ்பரஸ் நீரிணை ( )

- **11 – 15 வரையான வினாக்களுக்கு X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

11)

| X | Y |
|---|---|
| 1. போத்துக்கல் | A. ஜேவிஸ்காட்டியர் |
| 2. ஸ்பானியா | B. ஹென்றி ஹட்சன் |
| 3. இங்கிலாந்து | C. வஸ்கொடகாமா |
| 4. பிரான்ஸ் | D. பர்டினனட் மகெலன் |
| 5. ஒல்லாந்து | E. வோல்டர் ரலே |

1. ACBED 2. CABED 3. DECAB 4. CAEBD 5. CDEAB ( )

12)

| X | Y |
|---|---|
| 1. பிரான்ஸிஸ்கோ பிசாரோ | A. அமெரிக்காக்கண்டம் |
| 2. பர்னன்டோ கோடெஸ் | B. குவிபெக் |
| 3. சம்பலேன் மாக்விடே | C. மெக்சிகோ |
| 4. அமெரிக்கோ வெஸ்புசி | D. ஆபிரிக்காவின் தென்முனை |
| 5. பார்த்தரோலமியோ டயஸ் | E. பேரூ தேசம் |

1. ACDEB 2. BADEC 3. ECBAD 4. EBCAD 5. BDACE ( )

13)

| X | Y |
|---|---|
| 1. மகாபட்டயத்தில் கைச்சாத்திடல் | A. 1ம் சார்ள்ஸ் மன்னன் |
| 2. பாராளுமன்றத்தின் தந்தை | B. 2ம் ஜேம்ஸ் மன்னன் |
| 3. டியுடர் வம்ச 1வது ஆட்சியாளன் | C. 1ம் எட்வேர்ட் மன்னன் |
| 4. ஒலிவர் குறோம் வெல்லினால் கொலை - செய்யப்பட்ட இங்கிலாந்தின் மன்னன் | D. 3ம் ஜோன் மன்னன் |
| 5. மகோன்னத புரட்சியின் போது - இங்கிலாந்தின் மன்னன் | E. 7ம் ஹென்றி மன்னன் |

1. DABCE 2. ACBED 3. CEABD 4. EABDC 5. DCEAB ( )

14) X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | கிளிஸ்தெனீஸ் | A. | மருத்துவத்தின் தந்தை |
| 2. | ஹெரடோற்றஸ் | B. | விஞ்ஞானபூர்வ சோஸலிசத்தின் தாபகர் |
| 3. | ஹிப்போகிரடீஸ் | C. | மானிடவாதத்தின் தந்தை |
| 4. | பெற்றாக் | D. | அதினியன் குடியாட்சியின் தந்தை |
| 5. | கார்ள் மாக்ஸ் | E. | வரலாற்றின் தந்தை |

1. BEACD 2. CEABD 3. DCEAB 4. DEACB 5. EBACB ( )

15) X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | பிளேட்டோ | A. | இளவரசன் சிங்கத்தைப் போலவும் நரியைப் போலவும் பாவனை செய்தல். |
| 2. | அரிஸ்ரோட்டில் | B. | பெருமளவானோரின் பெரியளவிலான மகிழ்ச்சி |
| 3. | மாக்கியாவல்லி | C. | அதிகாரப் பகிர்வுக் கோட்பாடு |
| 4. | மொன்டெஸ்கியூ | D. | மனிதன் ஓர் அரசியல் பிராணி |
| 5. | ஜெரமி பெந்தம் | E. | தத்துவஞானிகளே மன்னர்கள் ஆகவேண்டும் |

1. BEACD 2. CEABD 3. DCEAB 4. DEACB 5. EDACB ( )

- **16 – 20 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16) அம்மை நோயை அடையாளம் கண்ட அறிஞர்.
1. பிளேட்டோ 2. அரிஸ்டோட்டில் 3. ஸ்பூலியஸ்
4. அல்ராசி 5. அவிசின்னா ( )

17) அச்சு இயந்திரத்தைக் கண்டறிந்தவர்.
1. நிக்கலஸ்கொப்பனிக்கஸ் 2. நியூட்டன் 3. கூட்டன்பேர்க்
4. ஜோனிசியஸ் 5. கலிலியோ கலிலி ( )

18) அமெரிக்கக் கண்டத்தைக் கண்டறிந்தவர்.
1. தொலமி 2. கொலம்பஸ் 3. வெஸ்புசி
4. ஜோன்கபோட் 5. லாசலே ( )

19) பிரான்சின் இங்கிலாந்து மன்னனுக்கு இருந்த உரிமையை முடிவுக்குக் கொண்டு வந்தவர்.
1. 9ம் லூயி 2. பிலிப்ஒகஸ்ரஸ் 3. 4ம் பிலிப்
4. 11ம் லூயி 5. 4ம் ஹென்றி ( )

20) ஜேர்மனியில் ஏற்பட்ட மத சீர்திருத்தத்திற்கு காரணமானவர்.
1. மார்ட்டின் லூதர் 2. ஜோன்கல்வி 3. உல்ரிச் சுவிங்கின்
4. ஜோன் ஹஸ் 5. ஜோன் வைக்ளிப் ( )

## பகுதி – II

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம் வினா கட்டாயமானது. (பகுதி A)**
- **அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை மூன்று ஆகும்).**
- **முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு ஐரோப்பிய புறவுருவப்படம் வழங்கப்படும்.**

### பகுதி A

*1)* **உமக்கு வழங்கப்பட்ட ஐரோப்பிய புருவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள இடங்களை குறித்துப் பெயரிடுக.**

*1.* கோர்சிகா  *2.* மன்செஸ்டர்  *3.* ரைபர் நதி  *4.* பொஸ்பரஸ்
*5.* சைன்நதி  *6.* கிரிமியா  *7.* பிரணீஸ்  *8.* கீல் கால்வாய்
*9.* மற்றிட்  *10.* உரோம்

*(10 புள்ளிகள்)*

### பகுதி B

*2)* **"உலகம் கண்ட நாகரீகங்களில் கிரேக்க நாகரீகம் சிறப்பு மிக்க ஒன்றாகும்."**
*1)* கிரேக்க கலாசாரத்தின் பிரதான பண்புகளை பரிசீலனை செய்க.

*(10 புள்ளிகள்)*

*3)* **"கிரேக்கர்களின் சாதனைகளை உரோமர்கள் பயன்படுத்தினர்."**
*1)* மேல்வரும் துறைகளின் பண்டைய உரோமர்கள் ஈட்டிய சாதனைகளை சுருக்கமாகப் பரிசீலனை செய்க.
*1.* ஆட்சி முறை  *2.* சட்டம்

*(10 புள்ளிகள்)*

*4)* **கீழ்வரும் தலைப்புக்களில் இரண்டைப்பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**
*1.* மானிய முறையின் வீழ்ச்சி  *2.* மறுமலர்ச்சிக் கலை  *3.* உரோம பொருளாதாரம்
*4.* கிறிஸ்தவ நாகரிகம்  *5.* இஸ்லாம் நாகரிகம்

(5x2=10 புள்ளிகள்)

### பகுதி C

*5)* **"நாடுகாண் பயணங்கள் ஐரோப்பாவிலே அரசியல் பொருளாதாரத் துறைகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின"**

*1.* ஆரம்ப நாடுகாண் பயணங்களில் ஈடுபட்ட ஒரு ஐபீரிய தேசத்தின் பெயரைக் குறிப்பிடுக. *(1 புள்ளி)*

*2.* நாடுகாண் பயணத்திற்கு ஆதரவளித்த அரசர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

*3.* நாடுகாண் பயணங்களில் விளைவாக ஐரோப்பாவில் பெருமளவில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார மாற்றங்களை ஆராய்க. *(7 புள்ளிகள்)*

*6)* **"பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களில் தேசிய அரசுகள் பிரதான இடத்தைப் பெறுகின்றன"**
*1.* பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தேசிய அரசுகள் தோன்றுவதற்கு வழிவகுத்த காரணிகள் யாவை? *(3 புள்ளிகள்)*
*2.* தேசிய அரசுகளின் பிரதான பண்புகளை பரிசீலிக்குக. *(7 புள்ளிகள்)*

*7)* **"ஐரோப்பாவின் இறுதிச்சமய யுத்தமாக முப்பதாண்டுப்போர் கொள்ளப்படுகின்றது"**
*1.* முப்பதாண்டுப்போர் அடிப்படையில் சமயம் சார்ந்ததாக இருந்தபோதிலும் அதில் அரசியல் காரணங்களும் அடங்கியிருந்தன. முப்பதாண்டுப்போர் ஏற்பட பிரதான காரணங்கள், மற்றும் அதன் கட்டங்கள் பற்றி மேலே தரப்பட்ட கூற்றோடு தொடர்புபடுத்தி விளக்குக.
*(10 புள்ளிகள்)*

*8)* **கீழ்வரும் தலைப்புக்களில் இரண்டைப்பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**
*1. 1688ல்* ஆங்கிலப்புரட்சி  *2.* மாற்றுச் சீர்திருத்தம்  *3.* மார்ட்டின் லூதர்
*4.* வெஸ்ட்.ஃ.பேலியா சமாதானம்  *5.* லியொனாடோ டாவின்சி

(5x2=10 புள்ளிகள்)